மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதி இல்லை. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டும் தனி விதி என்று அதற்கு விதிகள் உள்ளன. அதன்படி ஆராயப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : வேளாண்மை வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கின்றன. விண்ணப்பதாரர்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர்கள் விண்ணப்பித்தாலும் சுமார் 200 பேர்களுக்குத்தான் இடம் கிடைத்திருக்கிறது. ஆகவே இடங்களை அதிகப் படுத்த அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கூட ரெலவன்ட் அல்ல. உங்களுக்கு விருப்பம் இருந்தால் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தகுதிபற்றி கேட்டார்கள் என்றாலும், மாணவர்களுக்கு அதிக இடம் தரவேண்டும். இவைகளைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் தனியாகப் பேசி விளக்கமாக சொன்னால் சர்க்கார் வேண்டிய போதுமான கொள்கையை ஏற்றுக்கொள்ளும். இருக்கிற இடத்தைக் குறைக்காமல் தேர்வு நடத்தியிருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஆண்டு விவசாயக் கல்லூரி மாணவர்களை தேர்ந்து எடுத்த அடிப்படையில் ஒரு பெரிய கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் பட்டியல் அந்த விவசாயக் கல்லூரி தேர்வுக்கான பிராஸ்பெக்டஸ்-ல் சேர்க்கப்படாததால் முகமதியர், ஸி.எஸ்.ஐ. கிறுஸ்தவர்கள் ஆகியோர்களுக்கு இடம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் அந்த சமுதாயங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த நிலையை மேலும் ஏற்படுத்தாதபடி அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது கேள்வியாகப்படவில்லை. ஏதோ குறை சொல்கிறார்கள். அதை ஆராய்வதற்கான முயற்சியை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்.

விவசாயப் பாலிடெக்னிக்குகள்

* 78 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய பாலிடெக்னிக்குகளை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் விவசாயப் பாலிடெக்னிக்குகளை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

1972 ஆகஸ்ட் 11]

திரு. என். கிட்டப்பா : வேளாண்மைக் கல்லூரிகள் அமைப்பதற்கு சிரமங்கள் அதிகமாக இருப்பதாகக் காணப்படுவதால் இத்தகைய வேளாண்மை வளர்ச்சிக்கான பாலிடெக்னிக்குகளையாவது விரைவில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுபற்றிய யோசனை இப்போது இல்லை என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

புதிய கோதுமை ரகங்கள்

* 79 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிரிடுவதற்கு ஏற்ற கோதுமை ரகங்கள் ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் மலைப்பிராந்தியங்களில் பயிரிடுவதற்காக "சப்பேர்டு எலர்மா" என்ற ரகமும், சமநிலை இடங்களில் பயிரிடுவதற்காக "கல்யாண் சோனு" என்ற ரகமும் பரிந்துரைக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த ரக கோதுமைகள் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் பயிரிடலாம் என்று ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை இந்த நான்கு இடங்களில் பயிரிட, 1,250 ஏக்கரில் பயிரிடப்படுகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, as far as the Hosur taluk is concerned, it is situated at an altitude of 30,000 feet. So, may I know from the Hon. Minister whether such kind of wheat has been introduced so far in the Hosur taluk and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் சொன்ன நான்கு இடங்களில் இப்போது ஏற்பாடாகியிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் நீண்ட நாட்களாக ஹோசூர் பற்றி சொல்லிவருகிறார்கள். அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.